**தலைப்பு 258 - கண்டி மாவட்டச் செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

கண்டி மாவட்டச் செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 ஜுன் 22 ஆந் திகதியன்று மாவட்டச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது செவ்வை பார்த்தலின் அடிப்படையில் அமைந்தனவாகும். அவ்வாறான செவ்வை பார்த்தல்களின் நோக்கெல்லை மற்றும் அளவு என்பன எனக்குக் கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமானளவு விரிவானதோர் கணக்காய்வை மேற்கொள்ளக் கூடியவாறு தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 148,149,150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச் சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கிசையப் பேணப்படுதல், தயாரிக்கப்படுதல், நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு ஆகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்து, நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடல் அமுலாக்குதல், பேணுதல் என்பனவும் இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

மாவட்டச் செயலகத்திற்கென ஏற்பாடு செய்யப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 1,147.98 மில்லியன் ஆகும். மீளாய்வாண்டின் முடிவளவில் அதில் ரூபா 1,144.76 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, மாவட்டச் செயலகத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாட்டின் 0.28 சதவீதமான ரூபா 3.22 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறு.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | சேமிப்பு, நிகர நிதிஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | நிகர நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில் | ரூபா. மில் | ரூபா. மில் | |
| மீண்டுவருவன | 1,066.98 | 1,066.79 | 0.19 | 0.02 |
| மூலதனம் | 81.00 | 77.97 | 3.03 | 3.74 |
| மொத்தம் | 1,147.98 | 1,144.76 | 3.22 | 0.28 |

(ஆ) ஏனைய அமைச்சுக்கள் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் பயன்பாடு

பல்வேறு பணிகளுக்குமென மாவட்டச் செயலகத்திற்கு ஏனைய 29 அமைச்சுக்களும் 17 திணைக்களங்களும் வழங்கிய நிதி ஏற்பாட்டின் கூட்டுத் தொகை ரூபா 4,925.43 மில்லியனாகும். மீளாய்வாண்டினது முடிவளவில் அதில் ரூபா 4,271.17 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, வழங்கிய நிதியேற்பாட்டில் ரூபா 654.26 மில்லியன் அல்லது 13.28 சதவீதம் சேமிப்புக்குள்ளாகியது.

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

கண்டி மாவட்டச் செயலகத்திற்குரிய 25801 ஆம் இலக்கத்தின் கீழான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாகப் பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளவாறான பெறுமதிகளும் வருமாறு.

| செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதி கூடிய எல்லை | உள்ள வாறானது | அதி குறைந்த எல்லை | உள்ள வாறானது | அதி கூடிய எல்லை | உள்ள வாறானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 74.55 | 59.91 | 54.55 | 66.85 | 240.00 | 196.68 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

கண்டி மாவட்டச் செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 6 வைப்புக் கணக்கு மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 986.79 மில்லியன் ஆகும். விபரம் வருமாறு.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0001/0044/000 | 0.24 |
| 6000/0000/00/0002/0059/000 | 0.88 |
| 6000/0000/00/0013/0025/000 | 47.36 |
| 6000/0000/00/0016/0006/000 | 795.74 |
| 6000/0000/00/0017/0001/000 | 131.44 |
| 6000/0000/00/0018/0007/000 | 3.60 |
| 6000/0000/00/0034/0000/000 | 7.53 |
| மொத்தம் | 986.79 |

**2.4 கட்டு நிதிக் கணக்கு**

கண்டி மாவட்டச் செயலகத்தின் 7002/0000/00/0305/0015/000 ஆம் இலக்கக் கட்டு நிதிக் கணக்கின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 411.93 மில்லியனாகும்.

**2.5 கணக்காய்வு அவதானிப்பு**

கண்டி மாவட்டச் செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன மேலே 1.1 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்ட முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்குட்படத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்கிய கணக்காய்வு அவதானிப்புகளில் போதுமானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. போதியதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்**

**3.1 பதிவேடுகளையும் ஏடுகளையும் பேணாமை**

கண்டி மாவட்டச் செயலகம் பின்வரும் பதிவேடுகளைப் பேணியிருக்கவில்லை எனக் கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | தொடர்புடைய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|---|
| (அ) | பொறுப்புகளுக்கான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 | பேணப்படவில்லை. |
| (ஆ) | கணனிகள், துணைப் பாகங்கள், மென் அணி தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவெம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/200/02 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை | தும்பனே பிரதேச செயலகத்தால் பேணப்படவில்லை. |
| (இ) | காணியைக் குத்தகைக்கு வழங்குவது தொடர்பான முறையான பதிவேடு மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் அது தொடர்பாக அறவிடப்படும் தண்டனைப் பணம் என்பவற்றைக் குறிப்பதற்கான முறையான பதிவேடு | 2012 ஜூன் 06 ஆந் திகதிய 2012/02 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை | கங்கவட்ட கோறளை பிரதேச செயலகத்தால் பேணப்படவில்லை. |

**3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**3.2.1 பாதீட்டு முரண்**

இரண்டு செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த நிகர நிதியாகிய ரூபா 300,000 முற்றாகச் சேமிப்புக்குள்ளாகியது.

**3.2.2 ஏனைய அமைச்சுக்களும் திணைக்களங்களும் வழங்கிய நிதியேற்பாடு**

ஏனைய அமைச்சுக்களும் திணைக்களங்களும் மாவட்டச் செயலகத்திற்கு ஏற்பாடு செய்த நிதி பயன்படுத்தப்படுகையில் அவதானிக்கப்பட்டவை பின்வருமாறு.

(அ) தும்பனே பிரதேச செயலகத்தில் 2015 ஆம் ஆண்டின் போது வீட்டுக்கு வீடு, கிராமத்திற்குக் கிராமம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 1,000,000 மதிப்பீட்டில்

ஹியந்தல சனசமூக நிலையம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பான நேரடிப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) பொருத்தப்பட்ட கதவுகள் இரண்டிற்கு முறையான பலகை பயன்படுத்தப்படாததால் இரு கதவுகளிலும் வெடிப்புகள் காணப்பட்டன.

(ii) கதவுகளது பலகை இறுக்கமடைந்ததால் பூட்டுத் தகடுகள் இயங்காது போயின. அதனால் இரு பூட்டுக்கள் போடப்பட்டிருந்தன.

(iii) இம் மண்டபத்தின் 37 அடி நீளப் பலகையில் மூன்று இடங்களில் வெடிப்புகள் காணப்பட்டன. கூரைக்குப் பயன்படுத்திய 2x2 அடி பலகை 222 அடிக்குக் குறைவாக இருந்தது. (2x1 ½) இதற்கு ரூபா 18,334 செலவிடப்பட்டிருந்தது.

(iv) யன்னல்கள்/ நிலைகள் என்பவற்றில் வெடிப்புகள் காணப்பட்டன.

(ஆ) மெததும்பர பிரதேச செயலகத்தில் ஒரு கிராமத்திற்கு ஒரு வேலை எனும் செயற்திட்டத்தின் கீழ் 2015 ஆம் ஆண்டில் எஞ்சிய ரூபா 400,000 மதிப்பீட்டுடன் புடுஹுபுவ ஹங்சகிரி பேக்கறிக்கு அண்மையில் செல்லும் பாதை செப்பனிடப்பட்டிருந்தது. இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பாதை வெகுவாகக் கீழ் நோக்கி அமைவதால் தனது வீட்டிற்கு ஆபத்து ஏற்படலாம் என கிராமவாசி ஒருவர் எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்து பாதையைச் செப்பனிடும் வேலை நிறுத்தப்பட்டிருந்தது.

(ii) பாதையின் கீழே அமைந்துள்ள மதகு பாதையின் தேவைக்கேற்றவாறு அமைக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) முறையான ஆய்வின்றி செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டமையால் சமுதாய நலன் பெறப்படுவதில் தாமதம் நிலவியது.

(இ) ஒரு கிராமத்திற்கு ஒரு வேலை என்பதன் கீழ் ரூபா 500,000 பயன்படுத்தப்பட்டு அமுலாக்கப்பட்ட மெததும்பர பிரதேச செயலகத்தின் கல்கொட்டுவ பல பணிகள் நிலையத்தை அபிவிருத்தி செய்வது 2015 நவெம்பர் 19 ஆந் திகதியளவில் நிறுத்தப்பட்டதால் அவர்களை மட்டப்படுத்தல், யன்னல், கதவுகளைப் பொருத்துதல் ஆகியன முடிவடையவில்லை. இதனால் இச் செயற்திட்டத்தால் சமூக அபிவிருத்திப் பணிகள் பெறப்படாது போனது.

### 3.3 கட்டு நிதிக் கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொலுவ பிரதேச செயலகத்தில் 8 சந்தர்ப்பங்களில் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குவதற்கென வழங்கப்பட்ட முற்பணமானது பணி தொடங்குவதற்கு 4 முதல் 7 நாட்களுக்கு முன்பே முற்பணமாக வழங்கப்பட்டதால் பெற்றுக்கொண்ட முற்பணம் அக்காலப்பகுதியின் போது உத்தியோகத்தர்கள் வசமிருந்தது.

(ஆ) 2015 ஜுலை 14 ஆந் திகதிய 3/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்டவாறான நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம் பணி முடிவடைந்த 10 நாட்களுக்குள் பெறப்பட்ட செயல் நிமித்தக் கட்டு நிதி தீர்த்து வைக்கப்பட வேண்டுமாயினும், உடபலாத்த குண்டசாலை, உடதும்பர, பாத்ததும்பர, மெததும்பர, தொலுவ ஆகிய பிரதேச செயலகங்களில் 52 சந்தர்ப்பங்களில்

வழங்கப்பட்ட ரூபா 421,140 கூட்டுத் தொகையுடைய செயல் நிமித்தக் கட்டு நிதி பணி முடிவடைந்து 10 நாட்கள் முதல் 2 ½ மாதகால தாமதத்தின் பின்னரே தீர்த்து வைக்கப்பட்டிருந்தன.

### 3.4 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாவட்டச் செயலகத்திலும் 13 பிரதேச செயலங்களிலும் 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட (காணி வைப்பு நீங்கலாக) ரூபா 285,300,654 கூட்டுத் தொகையுடைய வைப்புகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உடபலாத்த பிரதேச செயலகத்தில் 10 ஆண்டுகளைக் கடந்துவிட்ட ரூபா 983,373 கூட்டுத் தொகையுடைய 07 காணி விண்ணப்ப வைப்புக்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 570 இன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) மெததும்பர பிரதேச செயலகத்தில் உடன்படிக்கைப் பிரகாரம் நிர்மாண வேலை ஒப்பந்தங்களுக்குக் கொடுப்பனவு செய்ய வேண்டிய தொகையில் ரூபா 358,482 கூட்டுத் தொகையுடைய வைப்புகள் 16 சந்தர்ப்பங்களில் வங்கிக் கணக்கிலிருந்தன. 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அவ்வைப்புகளது காலம் முடிவடைந்திருந்தும், அவ்வைப்புகளைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு, விடய இலக்கம் 25801 தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அறவீடு நிலையாக இருந்த மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 5,223,088 ஆகும். அந்நிலுவை மீதிகள் 6 மாங்கள் முதல் 13 வருடங்கள் வரையிலானவை. எனினும், அந்நிலுவை மீதிகளை அறவிடுவதற்கான தொடர் நடவடிக்கைகள் நலிவடைந்திருந்தன. அம்மீதிகளுள் ரூபா 3,521,038 தொகையானது 2016 ஜுலை 30 ஆந் திகதியளவில் அறவிடப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலாளர் அறிவித்திருந்தார்.

### 3.6 தீர்த்து வைக்கப்படாத பொறுப்புகள்

மாவட்டச் செயலகத்திலும் பிரதேச செயலகங்களிலும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓராண்டிற்குக் குறைவாக நிலவி வரும் பொறுப்புகளது கூட்டுத் தொகை ரூபா 1,459,655 ஆகும்.

### 3.7 இணங்காமை

#### சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

கங்கவட்ட கோறளை பிரதேச செயலகப் பிரிவில் உள்ள அரச காணிகளை அத்துமீறிக் கைப்பற்றுவதைத் தவிர்த்துக் கொள்வதற்கு அரசாங்க காணி நடவடிக்கைக் கோவை 180 ஆம் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்துரைக்கமையச் செயலாற்றாமையால் 3 கிராம சேவைப் பிரிவுகளில் 17 அத்துமீறிய குடியிருப்போர் அரச காணிகளில் இருப்பது அவதானிக்கப்பட்டது.

### 3.8 உள்ளூர் நிதியளிப்பின் மூலம் செயற்திட்டங்களை அமுலாக்குதல்

செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடுதல், செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்யாது கைவிடுதல் மற்றும் செயற்திட்டத் தாமதம் என்பன தொடர்பான கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின் போது தெரிய வந்த சந்தர்ப்பங்கள் வருமாறு.

(அ) செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடுதல்

மாவட்டச் செயலகத்தின் கீழ் பின்வரும் 09 பிரதேச செயலகங்கள் ரூபா 21.53 மில்லியன் கூட்டுத் தொகையுடைய மதிப்பிடப்பட்ட / அங்கீகரிக்கப்பட்ட பெறுமதியுடைய 30 செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிட்டிருந்தன.

| | பிரதேச செயலகம் | செயற்திட்ட எண்ணிக்கை | மதிப்பிடப்பட்ட / அங்கீகரிக்கப்பட்ட பெறுமதி | கைவிடுவதற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|
| | | | ரூபா. மில்லியன் | |
| (i) | யட்டிநுவர | 05 | 2.23 | வீடு ஒன்றிற்கு ஏற்படும் இழப்பு, காணிச் சச்சரவுகள், போதிய நீர் இல்லாமை, தொழில்நுட்ப உத்தியோகத்தர் மாற்றலாகியமை என்பன |
| (ii) | தெல்தொட்ட | 09 | 1.76 | திவி நெகும அபிவிருத்தி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கண்டி மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 6 மில்லியனை அமைச்சு மீண்டும் பெற்றுக் கொண்டமை. |
| (iii) | பஸ்பாகே கோறளை | 01 | 5.59 | பயன்படுத்திய மூலப்பொருட்கள் தொடர்பாக ஒப்பந்தகாரர், உள்ளூராட்சிப் பொறியியலாளர், மதிவுரையாளர் ஆகியோருக்கிடையே சச்சரவு நிலவியமை |
| (iv) | பஹத்தஹேவாஹெட்ட | 02 | 1.00 | போதிய கால அவகாசமின்மை |
| (v) | உடுநுவர | 03 | 2.36 | காணியைப் பெறுவதற்கு அங்கீகாரம் பெறப்படாமை, பொது உரித்து உள்ள இடமென ஒப்படைப்பதில் தாமதம் ஏற்பட்டமை, ஒப்பந்தகாரர் செயற்திட்டத்தை அமுலாக்க முன்வராமை. |
| (vi) | மெததும்பர | 06 | 3.15 | பெருந்தோட்டத்துறை அமைச்சின் அங்கீகாரம் பெறப்படாமை, கால அவகாசமின்மை, சீரற்ற கால நிலை காரணமாக 2015 நவெம்பர் 19 ஆந் திகதியளவிலும் வேலை ஆரம்பிக்கப்படாமையால் இரத்துச் செய்யப்பட்டமை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (vii) | பூஜாபிட்டிய | 02 | 1.23 | மழையுடன் கூடிய கால நிலை மற்றும் கால அவகாசமின்மை |
| (viii) | கங்க இஹல கோறளை | 03 | 1.70 | சீரற்ற கால நிலை, பொது உரித்துடைய தோட்டம் ஒன்று இருந்தமை, செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்குப் போதிய நிதியேற்பாட்டின்மை. |
| (ix) | கங்கவட்ட கோறளை | 05 | 2.51 | வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் அங்கீகாரம் கிடைக்காமை, செயற்திட்டத்தை அமுலாக்க முடியாதென நகர சபை அறிவித்தமை, சீரற்ற கால நிலை, பிரதேச சபையால் இரு செயற்திட்டங்களை அமுலாக்க முடியாது என அறிவித்தமை. |
| | மொத்தம் | 30 | 21.53 | |

**(ஆ) செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்யாது கைவிடுதல்**

மாவட்டச் செயலகத்தின் கீழ் பின்வரும் பிரதேச செயலகங்களால் 15 செயற்திட்டங்கள் ரூபா 26.74 மில்லியன் மதிப்பீட்டில் அமுலாக்கப்பட்டு அதில் 05 செயற்திட்டங்களுக்கு ரூபா 1.13 மில்லியன் செலவிடப்பட்டபோதும், அச் செயற்திட்டங்கள் பூர்த்தியாகாது கைவிடப்பட்டிருந்தன.

| | பிரதேச செயலகம் | அமுலாக்கிய செயற்திட்டங்களின் எண்ணிக்கை | மதிப்பிடப்பட்ட பெறுமதி | 2015.12.31 இல் உள்ளவாறான செலவினம் | கைவிடுவதற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | | | ரூபா | ரூபா | |
| (i) | குண்டசாலை | 01 | 490,000 | 250,000 | அதிக மழை |
| (ii) | பஹ்பாகே கோறளை | 01 | 4,219,000 | - | மூலப்பொருட்கள் தொடர்பாக சச்சரவு ஏற்பட்டமை |
| (iii) | மெததும்பர | 02 | 784,000 | - | நிர்மாணவேலை தொடர்பாக கட்டளை பெறப்பட்டமை |
| (iv) | பூஜாபிட்டிய | 03 | 1,960,000 | 714,280 | மழையுடன் கூடிய கால நிலை நிலவியமை |
| (v) | கங்க இஹல கோறளை | 03 | 10,350,000 | - | 2014 ஆம் ஆண்டில் முடிவடையாத செயற்திட்டமாக இருந்தமை, கடைசிக் கட்டம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | அமுலாக்கப்படாமை, காணி அரசாங்கத்திற்குச் சொந்தம் அல்லாததால் அதனைச் சுவீகரிக்கும் வரை செயற்திட்டத்திற்குக் கொடுப்பனவுகளை வழங்காமை என்பன. |
| (vi) | உடதும்பர | 01 | 7,071,416 | 170,507 | ஒப்பந்தகாரர் செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்யாமை, |
| (vii) | உடுநுவர | 04 | 1,862,000 | - | செயற்திட்டத்திற்கு எதிர்ப்பு உருவாகியமை, எஞ்சிய வேலையைப் பூர்த்தி செய்வதற்குப் போதிய நிதி இல்லாமை, பிரதேச சபை நிதியத்திலிருந்து ஒரு செயற்திட்டம் அமுலாக்கப்பட்டிருந்தமை, மதிப்பீட்டின் படி செயற்திட்டத்தை அமுலாக்காமை. |
| | | ------------- | --------------- | ----------------- | |
| | மொத்தம் | 15 | 26,736,416 | 1,134,787 | |
| | | ===== | ======= | ======== | |

**(இ) செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம்**

மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள பின்வரும் பிரதேச செயலகங்கள் மூன்றினால் ரூபா 48.59 மில்லியன் மதிப்பீட்டுப் பெறுமதியுடைய 13 செயற்திட்டங்கள் அமுலாக்கப்பட்டு அதில் 08 செயற்திட்டங்களுக்கு ரூபா 19.58 மில்லியன் செலவிடப்பட்டிருந்தபோதும், மீளாய்வாண்டு முடிவிலும் அச் செயற்திட்டங்களில் தாமதம் அவதானிக்கப்பட்டது.

| | பிரதச செயலகம் | செயற்திட்ட எண்ணிக்கை | மதிப்பிடப்பட்ட பெறுமதி | 2015.12.31 இல் உள்ளவாறான செலவினம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| (i) | ஹாரிஸ்பத்துவ | 01 | 30.45 | 11.85 | அதிக மழை |
| (ii) | அக்குறணை | 05 | 3.24 | - | நான்கு செயற்திட்டங்களுக்கு வழங்குநர்களால் கட்டளையிடப்பட்ட பொருட்களை வழங்க முடியாது போனமை, ஒரு செயற்திட்டத்திற்குரிய நலன்பெறும் மதவழிபாட்டுத் தலத்தின் ஒத்துழைப்பு கிடைக்காமை. |
| (iii) | பாத்தஹேவாஹெட்ட | 07 | 14.90 | 7.73 | அதிக மழை |
| | மொத்தம் | 13 | 48.59 | 19.58 | |

## 3.9 வங்கிக் கணக்குச் செயற்பாட்டில் உள்ள குறைபாடுகள்

**சீராக்கல் செய்யப்பட வேண்டிய மீதிகள்**

கண்டி மாவட்டச் செயலகம் 2015 திசெம்பர் மாதத்திற்கெனத் தயாரித்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் மாற்றப்படாத காசோலையாகக் காட்டப்பட்டு வங்கிக்குக் சமர்ப்பிக்கப்படாதுள்ள காலங் கடந்த ரூபா 383,722 பெறுமதியுடைய காசோலைகள் சம்பந்தமாக மீளாய்வாண்டு முடிவளவிலும் நிதிப்பிரமாணம் 396(ஈ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.10 மோசடித் தன்மை வாய்ந்த கொடுக்கல் வாங்கல்கள்

கண்டி மாவட்டத்தில் அரச சேவையில் உள்ள 25 வெளிக்கள உத்தியோகத்தர்கள் மக்கள் பிரதிநிதிகளாகவும் அறிமுகமாகி 2 மோட்டார் சைக்கிள்கள் வீதம் பெற்றிருந்தனர். அதற்கமைய, ஒவ்வொன்றும் 194,920 ஆக 25 மோட்டார் சைக்கிள்களுக்கு ரூபா 4,873,000 மேலதிகமாக அரசினால் செலவிடப்பட்டிருந்தது.

## 3.11 நட்டங்களும் இழப்புகளும்

மோட்டார் சைக்கிள்களைப் பெற்ற உத்தியோகத்தர்கள் அதற்குரித்தற்ற வேறு வேலைகளுக்குச் சேவையிலிருந்து விலகும் போது மோட்டார் சைக்கிள்களது மொத்தப் பெறுமதியும் திருப்பிச் செலுத்தப்பட வேண்டுமாயினும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் கங்கவட்ட கோறளை பிரதேச செயலகத்தில் பணியாற்றிய 04 உத்தியோகத்தர்கள் மத்திய மாகாண ஆசிரியர் நியமனங்களைப் பெற்றுச் சென்ற போது மோட்டார் சைக்கிள்களின் மொத்தப் பெறுமதியைத் திருப்பிச் செலுத்தியிருக்கவில்லை. இதன் பொருட்டு 04 ஸ்கூட்டர்களுக்கு ரூபா 846,807 அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3.12 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பன்வில பிரதேச செயலகத்தில் 2014 ஆம் ஆண்டினது பன்முகப்படுத்தப்பட்ட நிதியத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு 2015 ஆம் ஆண்டில் முடிவடையாதிருந்த நிக்கதென்ன நீர்த் தாங்கி அபிவிருத்திச் செயற்திட்டத்தின் மூலம் நீர்த் தாங்கியிலிருந்த நீர்க் கசிவைத் தவிர்ப்பதற்கு ரூபா 50,000 செலவிடப்பட்டிருந்தது. 2016 பெப்ரவரி 14 அன்று மேற்கொள்ளப்பட்ட நேரடிப் பரிசோதனையின் போது நீர்த் தாங்கி அபிவிருத்திக்குப் பின்னரும் நீர்க்கசிவு தொடர்ந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3.13 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

மாவட்டச் செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் சம்பந்தமாக திருத்தம் மேற்கொண்டிராத பந்திகள் பின்வருமாறு.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளுடனான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| ஆண்டு | பந்தி இலக்கம் | |
| 2010 | 4.10(i) | கண்டி மாவட்டச் செயலகத்திற்குச் சொந்தமான வாகனம் ஒன்று 2009 சனவரி 26 அன்று விபத்துக்குள்ளாகியதால் ரூபா 246,260 இழப்பு ஏற்பட்டது. அவ்விபத்து நடைபெற்று 3 மாதங்களுக்குள் நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் பூரண அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்திருக்க வேண்டுமாயினும், விபத்து நடைபெற்று 2 ஆண்டுகள் முடிவடைந்தும் அவ்வறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| 2010 | 4.10(v) | 2008 ஆம் ஆண்டில் வாகன விபத்து ஒன்றினால் ஏற்பட்ட ரூபா 360,435 இழப்பிற்கு கங்கஇஹல கோறளை பிரதேச செயலாளர் பொறுப்பாவார் என முடிவு செய்யப்பட்டிருந்தபோதும், அந்த இழப்பு அறவிடப்பட்டிருக்கவில்லை. |

## 3.14 முகாமைத்துவ நலிவுகள்

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிரதேச நிர்வாகத்தின் போது பொது மக்களுடன் சமீபமாக நடவடிக்கைகளில் ஈடுபடுவதைப் போன்றே அவர்களது பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்குவதற்கும் பிரதேச செயலாளர்கள் உத்தியோகபூர்வ மனையில் தங்கியிருப்பது அவசியம், எனினும், தும்பனை மற்றும் பன்வில பிரதேச செயலாளர்கள் அம் மனைகளில் குடியிருக்கவில்லை. உத்தியோகபூர்வ மனைகளில் வசிக்காமையால் அம்மனைகளை நிர்மாணிப்பதற்குச் செலவிடப்பட்ட தொகை பயனற்ற செலவினமாகியது.

(ஆ) தும்பனே பிரதேச செயலகத்திற்குரிய CPPD - 4379 இலக்க வாகனம் 2015 திசெம்பர் 14 ஆந் திகதி தரிப்பிடத்திலிருந்து கீழ் நோக்கிச் சென்று விபத்தக்குள்ளாகியிருந்தது. சாரதியின் கவனமின்மை மற்றும் முறையான பாதுகாப்பு முறை கடைப்பிடிக்காமை என்பவற்றால் இவ்விபத்து ஏற்பட்டுள்ளதாக

அறிவிக்கப்பட்டிருந்தது. இதனால் அரசிற்கு ஏற்பட்ட இழப்பு ரூபா 374,367 எனக் கணிப்பிடப்பட்டதுடன், 2016 மார்ச் 08 ஆந் திகதியளவிலும் அதனைப் பழுதுபார்ப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) கங்கவட்ட கோறளை பிரதேச செயலக அதிகாரப் பிரிவில் அரசிற்குச் சொந்தமான பிறொஸ்பெக்டனில் எனும் காணியில் முறையே 7.14 பர்ச்சஸ் மற்றும் 13.38 பர்ச்சஸ் என மொத்தம் 20.52 பர்ச்சஸ் 2 நபர்களால் அத்துமீறிய குடியேற்றத்திற்குள்ளாகியிருந்தது. அதனை மீளப் பெறுவதற்கு அலுவலகம் தவறியிருந்தது.

(ஈ) கங்கவட்ட கோறளை பிரதேச செயலகத்தின் அதிகாரப் பிரிவுக்குட்பட்ட இடங்களில் மண்சரிவினால் இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு வழங்குவதற்குத் தெரிவு செய்யப்பட்ட பிறொஸ்பெக்டனில் எனும் காணி தமக்குச் சொந்தமானது என பேராதனைப் பல்கலைக்கழகம் கூறியமையால் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அக்காணியை வழங்க முடியாதிருந்தது.

(உ) கங்கவட்ட கோறளை பிரதேச செயலகத்தின் அதிகாரத்துக்குட்பட்ட கண்டி வட்டபலுவ கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குச் சொந்தமான பீ.பீ.ஏ1454 இலக்க நில அளவியின் 3 ஆம் இலக்கக் காணித்துண்டை நலன்புரிச் சங்க அங்கத்தவர்கள் 13 பேருக்கு வழங்கும் குத்தகை அங்கீகாரத்தை காணி ஆணையாளரது 2014 ஆகஸ்ட் 05 ஆந் திகதிய 4/10/23359 ஆம் இலக்க கடிதம் இரத்துச் செய்திருந்தது. அக்காணியைத் திருப்பிப் பெறுவதற்கான நடவடிக்கையை 2016 மார்ச் 11 ஆந் திகதியளவிலும் அலுவலகம் மேற்கொண்டிருக்கவில்லை.

இதன் காரணமாக, காணித் துண்டுகளைப் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருந்த நபர்கள் குத்தகை வழங்குவதை இரத்துச் செய்தமைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தனர். அவ்வழக்கின் போது ‘‘காணியைக் குத்தகைக்கு வழங்கும் அங்கீகாரத்தை இரத்துச் செய்வதற்கான’’ காரணங்களைக் கருத்திற் கொள்ளாது விண்ணப்பதாரர்களுக்குக் காணித் துண்டை வழங்குவதற்கு முடிவு செய்து இணக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஊ) கங்கவட்ட கோறளை பிரதேச செயலகம் கணக்காய்விற்குச் சமர்ப்பித்த அறிக்கையின் பிரகாரம், 2015 ஆம் ஆண்டின் வருடாந்த காணி அனுமதிப்பத்திரக் கட்டண நிலுவை ரூபா 265,199 ஆகக் காட்டப்பட்ட போதும், கணக்காய்வின் கணிப்பீட்டின்படி 12 பிரிவுகளின் 43 குத்தகையாளர்களிடமிருந்து ரூபா 946,501 அறவிடப்பட வேண்டியிருந்தது.

(எ) கங்கவட்ட கோறளை பிரதேச செயலகத்தில் நெடுங்காலக் குத்தகை அனுமதிப்பத்திரங்கள் தொடர்பாகத் தெரிவு செய்யப்பட்ட சில கோவைகள் பரிசீலிக்கப்பட்ட போது, 02 கோவைகள் (அனுமதிப் பத்திரங்கள்) சம்பந்தமாக ரூபா 69,485 தவணைப்பணம் நிலுவையான இருந்ததுடன், குறித்த காலத்தில் பணம் அறவிடப்படாமையால் ரூபா 200,000 வட்டியுடன் மொத்தமாக ரூபா 269,485 அரசினால் அறவிடப்பட வேண்டியிருந்தபோதும், அத் தொகையை அறவிடுவதற்கு அலுவலகம் தவறியிருந்தது.

(ஏ) குண்டசாலை வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள பல்லேகெலே கிராமத்தில் 20 பர்ச்சஸ் உள்ள மு.பி.மஹ 5253, காணித் துண்டு இலக்கம் 33 இலங்கை நிர்வாகச் சேவைச் சங்க உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், குத்தகை வாடகை தடையின்றி செலுத்தப்பட வேண்டியுமிருந்தது. குத்தகையைச் செலுத்தாத சந்தர்ப்பத்தில் குத்தகை உடன்படிக்கை செயலிழப்பதுடன், காணித் துண்டைப் பெற்ற உத்தியோகத்தரிடமிருந்து 2015 திசெம்பர் 02 ஆந் திகதி வரை 7 ஆண்டுக் குத்தகையாக ரூபா 68,160 அறவிடப்படாதிருந்தது. 2004 ஜுலை 04 ஆந் திகதி

வெளியிடப்பட்ட வர்த்தமானியின் (ஐ) பிரிவின் பிரகாரம் குத்தகை உடன்படிக்கையை இரத்துச் செய்து காணியைச் சவீகரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஐ) கங்கவட்ட கோறளை பிரதேச செயலகம் நெடுங்காலக் குத்தகை அடிப்படையில் காணிகளை வழங்கியிருந்த 5 பேரிடமிருந்து ரூபா 77,456 குத்தகை நிலுவை வருமானத்தை அறவிட்டிருக்கவில்லை. அது தொடர்பான அறிக்கையோ ஏடுகளோ பிரதேச செயலகத்தில் இருக்கவில்லை. அவ்வாறே, அந்த நிலுவைக் குத்தகை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுமில்லை.

(ஒ) கங்கவட்ட கோறளை பிரதேச செயலகத்தில் குறித்த தினத்தில் குத்தகையைச் செலுத்தாத 03 குத்தகையாளரிடமிருந்து நூற்றுக்குப் பத்து வீதமான ரூபா 49,850 தண்டனை வட்டி அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஓ) பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் தேசிய நிர்வாக சீரமைப்பு மன்றம் என்பவற்றால் வெளியிடப்பட்ட பிரதேச செயலக சேவை வழிகாட்டிக் கோவையின் 11.4(V) பந்தியின் பிரகாரம் பிரதேச செயலகத்தால் வழங்கப்படும் பெறுமதிச் சான்றிதழ்களுக்குச் சொத்துக்களின் பெறுமதியில் 1.15 சதவீதம் அனுமதிப்பத்திரக் கட்டணமாக அறவிடப்பட வேண்டும். எனினும், கங்கவட்ட கோறளை பிரதேச செயலகம் 2014,2015 ஆம் ஆண்டுகளிலும் 2016 மார்ச் வரையிலும் சொத்துக்களது பெறுமதியில் 1 சதவீதத்தையே அறவிட்டமையால் அரசிற்கு ஏற்பட்ட வருமான இழப்பு ரூபா 39,558 ஆகும்.

**3.15 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளவாறான பதவியணியும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளவாறான எண்ணிக்கை | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 70 | 65 | 05 |
| (ii) | மூன்றாம் நிலை | 51 | 31 | 20 |
| (iii) | இரண்டாம் நிலை | 2,055 | 1,866 | 189 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 243 | 208 | 35 |
| | மொத்தம் | 2,419 | 2,170 | 249 |